بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلّي على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 29

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

19 துல்ஹஜ் 1437 ஹிஜ்ரி கமரி　　22 தபூக் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி　　22 செப்டம்பர் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தை பலவந்தமாகப் பரப்பவில்லை. பிறரை மிரட்டி இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டும் என்பதற்காக எவரும் வாளேந்தவில்லை. மாறாக, இவை தற்காப்புப் போர்களாகவே இருந்தன. நிராகரிப்பவர்கள் தாக்குதல் தொடுத்து வாளினால் இஸ்லாத்தை அழிக்க விரும்பியபோது தனது பாதுகாப்பிற்காக வாளேந்துவதைத் தவிர வேறு என்ன வழி இருந்திருக்க முடியும்?**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

*கேள்வி (2) :* ஹுஸூர் (அலை) அவர்கள் நூற்றுக்கணக்கான இடங்களில் இன்னும் சொல்வதென்றால் ஆயிரக்கணக்கான இடங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மார்க்கத்திற்காக வாளேந்தவில்லை என்று எழுதியுள்ளீர்கள். ஆனால், அப்துல் ஹகீமிற்கு எழுதிய கடிதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தின் பக்கம் மக்களை அழைப்பதற்காக பூமியில் இரத்த ஆறுகளை ஓடச் செய்தார்கள் என்று எழுதியுள்ளீர்கள். இதன் பொருள் என்ன ?

*பதில் :* நான் இப்போதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தை பலவந்தமாகப் பரப்பவில்லை என்றே கூறுகின்றேன். பிறரை மிரட்டி இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டும் என்பதற்காக எவரும் வாளேந்தவில்லை. மாறாக, இதில் இரண்டு விஷயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தன. முதலாவதாக, இவை தற்காப்புப் போர்களாகவே இருந்தன. நிராகரிப்பவர்கள் தாக்குதல் தொடுத்து வாளினால் இஸ்லாத்தை அழிக்க விரும்பியபோது தனது பாதுகாப்பிற்காக வாளேந்துவதைத் தவிர வேறு என்ன வழி இருக்க முடியும் ? இரண்டாவதாக, திருக்குர்ஆனில் இந்த போர்கள் நடப்பதற்கு ஒரு காலக்கட்டத்திற்கு முன்னதாகவே எவர்கள் இந்த தூதரை ஏற்றுக் கொள்ளவில்லையோ இறைவன் அவர்கள் மீது தண்டனையை இறக்குவான் என்று முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. அவன் விரும்பினால் விண்ணிலிருந்தோ அல்லது பூமியிலிருந்தோ அல்லது சிலரது வாளினால் மற்ற சிலருக்கு வாளின் சுவையை சுவைக்கச் செய்தோ இந்த தண்டனையை இறக்குவான். இவ்வாறே இதே கருத்தைக் கொண்ட வேறு முன்னறிவிப்புகளும் இருந்தன. அவை தமக்குரிய நேரத்தில் நிறைவேறின. தூதுரை ஏற்றுக் கொள்வது தேவையற்றதாக இருந்திருந்தால் பிறகு நிராகரிப்பவர்களது இரத்தத்தின் ஆறுகள் ஓடும் அளவில் இறைவன் இந்த தூதருக்காக தனது தன்மான உணர்வை ஏன் வெளிப்படுத்தினான் ? இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்காக அவர்கள் வற்புறுத்தப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால், எந்த மக்கள் இந்த தூதுரை பொய்ப்படுத்துபவர்களாகவும் மறுப்பவர்களாகவும் இருக்கின்றனரோ அவர்கள் தண்டனை மூலமாக அழிக்கப்படுவர் என்ற வாக்குறுதி திருக்குர்ஆனில் இருப்பதால் அவர்களது தண்டனைக்காக இந்த நிகழ்வு ஏற்பட்டது. அதாவது, சுயமே இந்த காஃபிர்கள் முதலில் போர் செய்தனர். அப்போது எந்த மக்கள் வாளை ஏந்தினரோ அவர்கள் வாளினாலேயே கொல்லப்பட்டனர். தூதரை மறுப்பது இறைவனது பார்வையில் எளிதான விஷயமாக இருந்திருந்தால் அவரை மறுத்த பிறகும் கூட இரட்சிப்பு கிடைக்க முடியும் என்றால், பிறகு அவன் இந்த தண்டனையை இறக்க வேண்டிய தேவை என்ன வந்தது ? அந்த தண்டனை எந்த வடிவில் இறங்கியது என்றால் அதற்கு உலகில் எந்த இணையும் இல்லை.

அல்லாஹ் கூறுகின்றான்: اِنْ يَّكُ كَاذِبًا فَعَلَيْهِ كَذِبُهٗ وَاِنْ يَّكُ صَادِقًا يُّصِبْكُمْ بَعْضُ الَّذِىْ يَعِدُكُمْ அதாவது, இந்த தூதர் பொய்யராக இருந்தால் அவரே அழிந்து விடுவார். ஆனால், அவர் உண்மையாளராக இருந்தால் உங்கள் தொடர்பாக செய்யப்பட்டுள்ள தண்டனை பற்றிய சில வாக்குறுதிகள் நிறைவேறி விடும்.☆

இப்போது சிந்திக்க வேண்டிய இடம் என்னவென்றால், இறைவனது தூதர் மீது ஈமான் கொள்ள வேண்டிய தேவை இல்லையென்றால் பிறகு ஈமான் கொள்ளாமல் இருப்பதற்கு தண்டனை பற்றிய வாக்குறுதி ஏன் தரப்பட்டிருக்கின்றது ? தெளிவாகத் தெரிவது என்னவென்றால், பலவந்தமாக தனது மார்க்கத்தை ஏற்க வைப்பதும் வாளின் மூலமாக ஒருவரை முஸ்லிம் ஆக்குவதும் வேறு விஷயமாகும். ஆனால் உண்மையான தூதருக்கு கீழ்ப்படியாமல் இருப்பவருக்கும் அவருக்கு எதிராக நிற்பவருக்கும் அவருக்கு துக்கத்தை தருபவருக்கும் தண்டனை வழங்குவது என்பது வேறு விஷயமாகும். தண்டனை வழங்குவதற்கு ஒரு நபர் முஸ்லிமாக வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. ஆனால், மறுப்புடன் எதிர்த்து நிற்பவர் கொலை செய்வதற்கு தகுதி பெற்றவராக ஆகி விட்டார். பிறகு அவர்களுக்கு இஸ்லாத்தை தழுவுகின்ற நற்பேறு கிடைத்து விட்டால் பிறகு அந்த தண்டனை மன்னிக்கப்பட்டு விடும் என்ற சலுகை இறைவன் தரப்பிலிருந்து அவர்களுக்கு தரப்பட்டிருக்கின்றது. பிறகு இன்னோரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

اِنَّ الَّذِيْنَ كَفَرُوْا بِاٰيٰتِ اللّٰهِ لَهُمْ عَذَابٌ شَدِيْدٌ وَاللّٰهُ عَزِيْزٌ ذُو انْتِقَامٍ அல்லாஹ்வின் அடையாளங்களை நிராகரிக்கின்றவர்களுக்கு நிச்சயமாக கடினமான தண்டனை இருக்கின்றது. மேலும் அல்லாஹ் வல்லோனும் பழிவாங்குபவனும் ஆவான். (3:5) இந்த வசனத்திலும் மறுப்பவர்களுக்கு தண்டனைக்கான வாக்குறுதி இருக்கின்றது என்பது தெளிவாக தெரிகின்றது. எனவே, அவர்கள் மீது தண்டனை இறங்குவது கண்டிப்பானதாக இருந்தது. எனவே, இறைவன் அவர்கள் மீது வாளினால் தண்டனையை வரச் செய்தான்.

பிரிதோரிடத்தில் திருக்குர்ஆனில் அவன் இவ்வாறு கூறுகின்றான்:

اِنَّمَا جَزٰٓؤُا الَّذِيْنَ يُحَارِبُوْنَ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَيَسْعَوْنَ فِى الْاَرْضِ فَسَادًا اَنْ يُّقَتَّلُوْٓا اَوْ يُصَلَّبُوْٓا اَوْ تُقَطَّعَ اَيْدِيْهِمْ وَاَرْجُلُهُمْ مِّنْ خِلَافٍ اَوْ يُنْفَوْا مِنَ الْاَرْضِ ؕ ذٰلِكَ لَهُمْ خِزْىٌ فِى الدُّنْيَا وَلَهُمْ فِى الْاٰخِرَةِ عَذَابٌ عَظِيْمٌ

அல்லாஹ்வுடனும் அவனது தூதருடனும் போரிட்டு பூமியில் குழப்பம் செய்து கொண்டு திரிபவர்களுக்குரிய தண்டனை அவர்கள் கொல்லப்பட வேண்டும் அல்லது சிலுவையில் அறைந்து கொல்லப்பட வேண்டும் அல்லது மாறு கால் மாறு கை வாங்கப்பட வேண்டும் அல்லது அவர்கள் நாடு கடத்தப்பட

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ்வின் அருளால் கடந்த வாரம் பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு நடந்தது. பல பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தபோதிலும், உலகின் சூழ்நிலையை மனதில் கொண்டு அதிகமான கவலை இருந்தபோதிலும் முழு பாதுகாப்புடன் மாநாடு நடந்தது. மிகவும் அழகிய முறையில் மூன்று நாட்களும் கழிந்தன. மாநாடும் முடிந்தது - அல்ஹம்துலில்லாஹ்!

பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மாநாடு காலத்தின் கலீஃபா இங்கு இருக்கிற காரணத்தால் ஒரு வகையில் உலகளாவிய மாநாடு ஆகி விட்டது. முழு உலகின் பிரதிநிதிகளும் வருகிறார்கள். இவ்வருடம் மாநாட்டின் ஏற்பாடுகள் அல்லது தன்னார்வத் தொண்டர்களின் அடிப்படையிலும் கூட அதற்கு ஓர் உலகளாவிய அந்தஸ்து கிடைத்து விட்டது. தொண்டர்கள் உலகின் பல நாடுகளிலிருந்து வருகிறார்கள். அமெரிக்காவின் பெரும்பாலான இளைஞர்கள் மாநாட்டிற்கு முன்பே வேலை செய்தார்கள். கனடாவிலிருந்து வந்த 150 -ஐ விட அதிகமான குத்தாம் மாநாட்டிற்குப் பிறகுள்ள சுருட்டும் பணியில் ஈடுபடுகிறார்கள்.

யூ.கே -வின் சுமார் ஆறாயிரம் இளைஞர்கள் - இளம்பெண்கள், ஆண்கள் - பெண்கள், சிறுவர் - சிறுமியர் விருந்தினர்களுக்கு பணி செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவை அனைத்தும் அல்லாஹ்வின் அருளாகும். அவன் இவ்வளவு எண்ணிக்கையில் நமக்கு தொண்டு செய்பவர்களை ஏற்பாடு செய்தான்.

✿ நான் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு அமைதி மற்றும் அன்பின் தூதுவர்களை சந்திக்கும் வாய்ப்பு பெற்றேன். ✿ நான் இந்த மாநாட்டை உண்மையான நிம்மதியின் வீடு என்று கூறுவேன். ✿ இத்தகைய ஏற்பாடுகளுக்குப் பின்னால் என்ன இரகசியம் இருக்கின்றது? என்று அறிய முயன்றேன். பிறகு நான் ஒரு முடிவுக்கு வந்தேன். இம்மக்கள் ஒரு கிலாஃபத்தை நம்புகின்றனர். எல்லா தியாகங்களுக்கும் ஆயத்தமாகி விட்ட ஒரு சமுதாயம் உருவாகி விட்டது. ✿ உங்களது மாநாட்டில் இளைஞர்கள் மற்றும் சிறுவர்களைப் பார்த்தேன். தங்களைப் பற்றி கவலைப்படாமல் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்கு ஆயத்தமாக இருக்கின்றனர். இந்த இளைஞர்கள், சிறுவர்கள் மூலமாக ஓர் உலகம் உருவாகும். அதில் சுயநலம் இருக்காது. மாறாக, பிறருக்கு தொண்டு செய்வதே அதன் மிக உயரிய இலக்காக இருக்கும். மிக உயரிய போதனையுடன் அஹ்மதிய்யத் ஒரு கண்ணாடியைப் போன்று இஸ்லாத்தின் அழகிய முகத்தை உலகிற்கு காட்டுகிறது. ✿ இத்தகைய உயர்ந்த ஏற்பாட்டினை நான் வேறெங்கும் கண்டதில்லை. அன்பு, நேசம் காட்டுபவர்கள், மனித நேயத்தை மதிப்பவர்களாகிய இளைஞர்கள், சிறுவர்கள் மாநாட்டின் எல்லாப் பகுதியிலும் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக ஆயத்தமாக இருந்தனர். அவர்களுக்கு எப்போதும் அவர்களின் கலீஃபாவின் வழிகாட்டல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ✿ M.T.A -வின் ஏற்பாடும் என்னை மிகவும் வியப்பிற்குள்ளாக்கி விட்டது. ✿ இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நபரும், தமது மொழியில் மாநாட்டின் சொற்பொழிவின் மொழிபெயர்ப்பைக் கேட்டு மாநாடு தனது நாட்டில் நடப்பதாக உணர்கிறார். அவரது மொழியில் அவரது சமுதாயத்தில் மாநாடு நடப்பதாக உணர்கிறார். ✿ மாநாட்டை ஆழமாக ஆய்வு செய்தேன். ஒற்றுமையும் ஒருமைப்பாடும் இல்லை எனில் செல்வத்தால் எதுவும் செய்ய முடியாது என்று முடிவுக்கு நான் வந்து விட்டேன். நீங்கள் ஓர் உடலைப் போன்று ஆகி விட்டால் எல்லாமே சாத்தியமாகும். மாநாட்டின் தொண்டர்கள் ஓர் உடலைப் போன்று ஆகி விட்டனர். அவர்கள் சாத்தியமற்றதை சாத்தியமாக்கிக் காட்டினர். ✿ மாநாட்டில் கலந்து கொண்டதில் எனக்கு வானத்திலிருந்து ஓர் ஒளி இறங்குவதாகவே தென்பட்டது. ✿ உலகில் எந்தவொரு சமுதாயத்திலும் இந்த அளவுக்கு தன்னார்வத் தொண்டாற்றுகின்ற இளைஞர்கள் இல்லாததற்கு சமம் என்ற நிலையைத்தான் காண முடிகின்றது. ✿ குறிப்பாக சிறுவர்களின் எழுச்சிமிகு பங்களிப்பை அஹ்மதிய்யத்தின் நிகழ்காலமும் எதிர்காலமும் ஒளிமயமானது என்பதை எடுத்துக் கூறுகிறது - இன்ஷா அல்லாஹ். ✿ மாநாட்டின் சூழல் மிகவும் ஆன்மீகமயமாக இருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத் புதிதாக வருகிற ஒவ்வொருவருக்கும் மிக உயரிய விருந்தோம்பலுடன் இஸ்லாத்தின் உண்மையான புதிய முகத்தைக் காட்டித் தருகின்றது. ✿ உலகில் ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலிருந்தும் வந்த இவ்வளவு பெரும் கூட்டம் மிகவும் அன்புடனும் அமைதியுடனும் ஒன்றாக இணைந்திருப்பதைப் பார்த்து என் உள்ளத்தில் ஆழிய தாக்கம் ஏற்பட்டது. ✿ இன்று இஸ்லாமிய போதனையின் செயல் முன்மாதிரியைப் பார்த்து இன்று நாம் நமது வட்டத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தின் அடிப்படையில் நமது சூழலில், நமது மக்களிடம் இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் பார்க்க வேண்டும் என்றால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் சென்று பாருங்கள் என்று கூறலாம். ✿ மாநாடு மிகவும் அழகிய ஓர் நிகழ்ச்சி என்று கருதுகிறேன். இஸ்லாத்தின் அழகிய படத்தைக் காட்டுவதற்காக இந்த வழி மிகவும் பொருத்தமானதாகும். மேலும் இந்த மாநாட்டினால் இன்னொரு விஷயம் தெளிவாக கண்முன் வருகிறது. அதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத் முழு உலகின் மக்களுக்கும் எப்போதும் பணி செய்து வருகிறது. ✿ ஆண்டு மாநாட்டையும் முதல் நாளன்று ஏற்றப்பட்ட கொடிகளையும் பார்க்கும்போது அது எனக்கு ஐக்கிய நாட்டு சபையைப் படம் பிடித்துக் காட்டக்கூடியதாக இருந்தது. ஆனால், காலத்தின் கலீஃபாவின் இறுதி சொற்பொழிவைக் கேட்ட போது என் கருத்து மாறியது. ஐக்கிய நாடுகளின் சபையில் ஒவ்வொரு நாட்டின் தூதுவரும் கலந்து கொள்கின்றனர். ஒவ்வொருவரும் அது சரியோ தவறோ தனது பயனிற்கான பேச்சைப் பேசுகின்றனர். ஆனால், காலத்தின் கலீஃபாவோ முழு உலகிற்கும் நீதியைப் பற்றி எடுத்துக் கூறுகின்றார்கள். இது ஆண்டு மாநாட்டை ஐக்கிய நாடுகளின் சபையை விட்டும் வேறுபடுத்தி அதற்கு தனிச்சிறப்பை வழங்குகிறது.

[ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட விருந்தினர்களில் சிலரது தாக்கங்கள்]

இந்த முறை அல்லாஹ்வின் அருளால் ஊடகங்களிலும் கடந்த வருடங்களை விட மாநாடு மிகவும் அதிகமாக கவரேஜ் செய்யப்பட்டிருக்கின்றது.

ஒவ்வோர் அஹ்மதியும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதில் அதன் உச்சத்தை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதற்கு ஒரேயொரு வழிதான் இருக்கின்றது. அதாவது, நாம் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்படுபவர்களாக ஆக வேண்டும். அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

**ஸய்யிதுனா அமீருல் மு:மினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்**
**19 ஆகஸ்டு 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **19 ஸஹூர்** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ . الرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அல்லாஹ்வின் அருளால் கடந்த வாரம் பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு நடந்தது. பல பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தபோதிலும், உலகின் சூழ்நிலையை மனதில் கொண்டு அதிகமான கவலை இருந்தபோதிலும் முழு பாதுகாப்புடன் மாநாடு நடந்தது. மிகவும் அழகிய முறையில் மூன்று நாட்களும் கழிந்தன. மாநாடும் முடிந்தது – அல்ஹம்துலில்லாஹ்! வருங்காலத்திலும் கூட ஜமாஅத்தை எல்லா வகையான தொல்லைகளிலிருந்தும் தீங்குகளிலிருந்தும் அல்லாஹ் பாதுகாப்பாக வைப்பானாக!

மாநாட்டின் ஆன்மீகச் சூழல் குறித்து நம்மவரும் அந்நியரும் எந்த உணர்வை உணர்ந்தார்களோ எதை வெளிப்படுத்தினார்களோ அந்த தாக்கத்தை அல்லாஹ்

எப்போதும் நிலைபெறச் செய்வானாக! எப்போதும் நாம் அல்லாஹ்வின் நன்றியுடைய அடியார்களாகியவாறு அவன் முன் ஓர் உறுதியுடன் குனிவோமாக! உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதாக எந்த விஷயத்தில் நாம் உறுதி எடுத்துள்ளோமோ மற்றும் எந்த விஷயங்களில் நாம் தாக்கத்தைப் பெற்றுள்ளோமோ அதனை எப்போதும் நமது வாழ்வில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து வருவோமாக! அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

நாம் எப்போதும் துஆ செய்து வர வேண்டும். "அல்லாஹ்வே! உனது அருள்களின் மழைகள் எம்மீது பொழிந்து கொண்டிருக்கின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு தரப்பட்ட முன்னறிவிப்புகளை நீ எவ்வாறு நிறைவேற்றுகிறாயோ அது எமது ஏதாவது தவறு அல்லது தகுதியின்மை காரணமாக எம் வாழ்வின் அங்கமாகி விடுவதிலிருந்து விலக்கப்பட்டு விடக் கூடாது."

மேலும் துஆ செய்ய வேண்டும். "அல்லாஹ்வே! நன்மையைச் செய்யும் ஆற்றலும் உன்னிடமிருந்தே கிடைக்கிறது. அதில் நிலைத்து நிற்கும் சக்தியும் உன்னிடமிருந்தே கிடைக்கிறது. நாங்கள் எமது பலவீனங்கள் மீது உனது அருளாலேயே வெற்றி பெற முடியும். எமது சாதாரண முயற்சிகளிலும் கூட எப்போதும் பரக்கத்தை வழங்குவானாக! எம்மை எப்போதும் உன்னுடன் நெருங்கி இருக்கக்கூடிய உனக்கு நன்றி செலுத்தக்கூடிய அடியார்களுடன் இணைத்து வைப்பாயாக! நாம் நன்றி செலுத்தும் அடியார்களானவாறு அல்லாஹ்வின் இப்பிரகடனத்திற்குரியவர்களாக ஆவோமாக! அதாவது, *வயின் ஷகர்த்தும் ல அஸீதன்னகும்* – நீங்கள் நன்றி செலுத்துவீர்கள் எனில் நிச்சயமாக நான் மேலும் அதிகமாக வழங்குவேன்." அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

அல்லாஹ்வின் அருளால் மாநாட்டின் பணிகள் மாநாட்டிற்கு முன்பே ஆரம்பமாகி விடுகின்றது. அதனை செய்வதற்காக குத்தாம், அத்ஃபால், அன்ஸார் ஆகியோர் வகாரே அமல் செய்வதற்காக தம்மை அர்ப்பணிக்கின்றனர். நான் கடந்த குத்பாவில் குறிப்பிட்டது போன்று மாநாட்டிற்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பே பணி தொடங்கி விடுகிறது. சுமார் இரண்டு மூன்று வாரங்கள் வரை எல்லாவற்றையும் சுருட்டும் பணிகளுக்கான வேலைகள் மாநாடு முடிந்த பிறகும் தொடர்கிறது. மிகவும் உழைப்புடன் கலப்பற்ற தூய்மையுடன் பணி செய்கிறார்கள். பிறகு மாநாட்டில் டியூட்டி தருகிறார்கள். பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மாநாடு காலத்தின் கலீஃபா இங்கு இருக்கிற காரணத்தால் ஒரு வகையில் உலகளாவிய மாநாடு ஆகி விட்டது. முழு உலகின் பிரதிநிதிகளும் வருகிறார்கள். இவ்வருடம் மாநாட்டின் ஏற்பாடுகள் அல்லது தன்னார்வத் தொண்டர்களின் அடிப்படையிலும் கூட அதற்கு ஓர் உலகளாவிய அந்தஸ்து கிடைத்து விட்டது. கடந்த வருடமும் கனடாவிலிருந்து குத்தாம் வகாரே அமல் செய்வதற்கு வந்தார்கள். ஆனால் குறைந்த எண்ணிக்கையில் வந்தார்கள். அவர்களிடமிருந்து சரியான முறையில் பணியை வாங்கவும் முடியவில்லை. காலம் குறைவாக இருந்ததால் பணியைச் சரியாக முடிக்கவும் முடியவில்லை.

ஆனால், இவ்வருடம் மிகச் சிறப்பாக திட்டமிடப்பட்டது மட்டுமல்லாமல் நான் தெரிவித்தது போன்று மிகச் சிறந்த பணியும் அல்லாஹ்வின் அருளால் நடந்தது. தன்னார்வத் தொண்டர்களின் எண்ணிக்கை கூட சென்ற வருடம் இருந்ததை விட மிக அதிகமாகும். இவ்வருடம் அமெரிக்காவிலிருந்தும் குத்தாம் வகாரே அமல் செய்வதற்காக வந்தார்கள். இந்த அடிப்படையில் இந்தப் பணியும் வகாரே அமலும் கூட சர்வதேச அந்தஸ்து பெற்று விட்டது. தொண்டர்கள் உலகின் பல நாடுகளிலிருந்து வருகிறார்கள். அமெரிக்காவின் பெரும்பாலான இளைஞர்கள் மாநாட்டிற்கு முன்பே வேலை செய்தார்கள். கனடாவிலிருந்து வந்த 150 –ஐ விட அதிகமான குத்தாம்கள் மாநாட்டிற்குப் பிறகுள்ள சுருட்டும் பணியில் ஈடுபடுகிறார்கள். யூ.கே –வின் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சத்ர் என்னிடம் கூறினார்: வெளியிலிருந்து வந்த குத்தாம் மிகவும் உழைத்து பணி செய்தது மட்டுமின்றி மிகவும் திட்டமிட்டும், உணர்வுடனும் விரைவாகவும் கூட பணிகளைச் செய்தனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக!

யூ.கே –வின் குத்தாம் மற்றும் அத்ஃபாலும் வகாரே அமல் மற்றும் டியூட்டி கொடுக்கும் பணியையும் செய்து வந்தனர். அவர்களும் கூட நமது நன்றிக்குரியவர்கள் ஆவர். மிகவும் உழைத்து பணி செய்தனர்; செய்கின்றனர். யூ.கே. ஜமாஅத்தின் டியூட்டி தந்த அத்ஃபால், குத்தாமுடன் மாநாட்டில் ஏற்பாட்டாளர்களுக்கும் மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கும் பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத் நன்றி தெரிவிக்க வேண்டும். மேலும், கனடாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் வந்த குத்தாமிற்கும் நன்றி செலுத்துங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவன் நம்மை இந்த ஐரோப்பா மற்றும் மேற்கத்திய நாடுகளில் வளர்ந்த மற்றும் பராமரிக்கப்பட்டவர்களை சுயநலமில்லாமல் தன்னார்வத்துடன் தொண்டு செய்ய வைத்துள்ளான். யூ.கே –வின் சுமார் ஆறாயிரம் இளைஞர்கள் – இளம்பெண்கள், ஆண்கள் – பெண்கள், சிறுவர் – சிறுமியர் விருந்தினர்களுக்கு பணி செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். இவை அனைத்தும் அல்லாஹ்வின் அருளாகும். அவன் இவ்வளவு எண்ணிக்கையில் நமக்கு தொண்டு செய்பவர்களை ஏற்பாடு செய்தான். கழிப்பறையை சுத்தம் செய்வதிலிருந்து உணவு சமைத்தல், உணவு பரிமாறுதல், பாதுகாப்பு ஏற்பாடு, பிறகு மாநாட்டுத் திடலில் பல்வேறு பணிகள், பார்க்கிங் மற்றும் பிற வசதிகளைச் செய்து தருதல், அவை அனைத்தையும் சுருட்டுதல் வரையுள்ள அனைத்துப் பணிகளையும் ஒரு நிபுணத்துவத்துடனும் திட்டமிடுதலுடனும் செய்தனர். இந்தக் காட்சியை நாம் உலகில் வேறெங்கும் காண இயலாது. எனவே, இந்த தொண்டு செய்தவர்கள் நமது நன்றிக்கு உரியவர்களாவர். அதேபோன்று இந்த தொண்டர்கள் மற்றும் தன்னார்வர்களும் சரி அவர்களும் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவனே அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய விருந்தினர்களுக்கு தொண்டு செய்யும் வாய்ப்பை வழங்கினான். அல்லாஹ் அவர்களுக்கு வருங்காலத்தில் முன்னரை விட அதிகமாக தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பினை வழங்குவதற்காக நாம் துஆ செய்ய வேண்டும். வெளியிலிருந்து வந்த விருந்தாளிகள் மிகவும் வியப்புடன் இதனை வெளிப்படுத்தினர். எவ்வாறு இந்த சிறுவர்கள், இளைஞர்கள் தமது பணியின் மூலம் மற்றவர்களை கவர்ந்திருக்கிறார்கள் என்பதை சில விருந்தாளிகளின் தாக்கத்தை எடுத்து வைக்கிறேன். மாநாட்டின் நிகழ்ச்சிகளும், பணி செய்பவர்களும் எத்தகைய மவுனமான தப்லீக் செய்பவர்கள் எனில், மற்ற வழிமுறைகள் மற்றும் பிரசுரங்கள் விநியோகம் செய்வதை விட அது பன்மடங்கு அதிகமான தப்லீகாக விளங்குகிறது.

மாநாட்டில் கலந்து கொண்ட பெனின் உடைய பாதுகாப்புத்துறை அமைச்சர் கூறுகிறார்: நான் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு அமைதி மற்றும் அன்பின் தூதுவர்களை சந்திக்கும் வாய்ப்பு பெற்றேன். ஒவ்வொரு சிறுவரும் இளைஞரும் மற்றவருடன் இனிமையுடன் சந்திப்பதைப் பார்க்க முடிந்தது. ஒருவருக்கு மற்றவருடைய மொழி புரியா விட்டாலும் புன்முறுவலுடன் நல்வரவு கூறினர். மற்றவரின் மொழியில் ஒன்றிரண்டு வார்த்தைகளையாவது கூற முயற்சி செய்தார்கள். ஆண்டு மாநாடு உண்மையான சகோதரத்துவத்தின் மிகப்பெரும் உதாரணமாகும்.

அவர் தொடர்ந்து கூறுகிறார்: நான் இந்த மாநாட்டை உண்மையான நிம்மதியின் வீடு என்று கூறுவேன். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொரு சிறுவரும், பெரியவரும், முதியோரும் தியாகம் செய்தவாறு பிறரது நிம்மதியில் கவனம் செலுத்தினர். மேலும் கூறுகிறார்: உங்கள் மாநாடு ஒரு அகாடெமியின் தரத்தில் உள்ளது. அதிகமாக கற்றுக் கொள்ள முடிந்தது. இவ்வளவு பெரிய கூட்டத்தில் தள்ளு முள்ளு ஏற்பட நான் பார்க்கவில்லை. ஒவ்வொன்றும் ஓர் ஒழுங்குடனும் ஒரு வழிமுறையுடனும் நடந்து கொண்டிருந்தது. இது என்னைப் பொருத்தவரை மிகவும் வியக்கத்தக்க விஷயமாக இருந்தது. வந்திருந்த ஒவ்வொரு சிறியவரும் பெரியவரும் விருந்தினரின் தேவையை நிறைவேற்றுவதில் மூழ்கி இருந்தனர். ஒரு பொருளை சைக்கினையாகக் கேட்டால் கூட அது இல்லா விட்டாலும் வாங்கி வந்து தருவதற்கு முயற்சி செய்யப்பட்டது. மிகப்பெரிய விஷயம் மாநாட்டில் கலந்து கொள்பவரின் பாதுகாப்பு ஏற்பாடு மிக மிக உயரிய நிலையில் இருந்தது. பாதுகாப்பு ஏற்பாட்டில் மிகச் சிறந்த திட்டமிடுதல் இருந்தது. வல்லுனர் குழு வந்து இவை அனைத்தையும் செய்திருப்பது போன்று காணப்பட்டது. ஆனால், அங்கு எந்த காவல் துறையினரோ, இராணுவத்தினரோ தென்படவில்லை. பிறகு கூறுகிறார்: இத்தகைய ஏற்பாடுகளுக்குப் பின்னால் என்ன இரகசியம் இருக்கின்றது? என்று அறிய முயன்றேன். பிறகு நான் ஒரு முடிவுக்கு வந்தேன். இம்மக்கள் ஒரு கிலாஃபத்தை நம்புகின்றனர். அதன் மூலமாக எல்லா தியாகங்களுக்கும் ஆயத்தமாகி விட்ட ஒரு சமுதாயம் உருவாகி விட்டது.

இவையெல்லாம் கலந்து கொண்ட வெளியிலுள்ள மக்களின் தாக்கங்கள் ஆகும்.

பிறகு மாநாட்டிற்கு வந்த பெனின் உடைய பத்திரிகையாளர் கூறுகிறார்: இந்த மாநாட்டின் ஏற்பாடுகளை எவரிடம் கூறினாலும் அவர் வந்து தம் கண்களால் காணாத வரை அவருக்கு உறுதி ஏற்பட முடியாது. உங்களுடைய மாநாட்டில் கலந்து கொண்டு எனக்கு நம்பிக்கையின் தூதுச் செய்தி கிடைத்தது. உலகின் எல்லா பக்கங்களிலும் சுயநலனிற்காக குழப்பங்கள் விளைவிக்கப்படுகின்றன. ஆனால், உங்களது மாநாட்டில் இளைஞர்கள் மற்றும் சிறுவர்களைப் பார்த்தேன். அவர்கள் தங்களைப் பற்றி கவலைப்படாமல் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்கு ஆயத்தமாக இருக்கின்றனர். இந்த இளைஞர்கள், சிறுவர்கள் மூலமாக ஓர் உலகம் உருவாகும். அதில் சுயநலம் இருக்காது. மாறாக, பிறருக்கு தொண்டு செய்வதே அதன் மிக உயரிய இலக்காக இருக்கும். மிக உயரிய போதனையுடன் அஹ்மதிய்யத் ஒரு கண்ணாடியைப் போன்று இஸ்லாத்தின் அழகிய முகத்தை உலகிற்கு காட்டுகிறது.

மேலும் கூறுகிறார்: நான் உலகின் பல இடங்களுக்குச் சென்றுள்ளேன். பத்திரிகையாளன் என்ற முறையில் ஹஜ்ஜிற்கும் சென்றுள்ளேன். ஐக்கிய நாட்டு சபையின் பெரிய Conference – களிலும் பங்கு பெற்றுள்ளேன். இத்தகைய உயர்ந்த ஏற்பாட்டினை நான் வேறெங்கும் கண்டதில்லை. அன்பு, நேசம் காட்டுபவர்கள், மனித நேயத்தை மதிப்பவர்களாகிய இளைஞர்கள், சிறுவர்கள் மாநாட்டின் எல்லாப்

பகுதியிலும் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக ஆயத்தமாக இருந்தனர். அவர்களுக்கு எப்போதும் அவர்களின் கலீஃபாவின் வழிகாட்டல் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

மேலும் கூறுகிறார்: எனக்கு இது மிக உயரிய அனுபவமாகும். பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் புன்சிரிப்புடன் விருந்தினருக்கு தொண்டு செய்வதைக் கண்டேன். இங்கு எவர் செல்வந்தர்? எவர் ஏழை? என்று அறிய முடியாதவனாகி விட்டேன். ஒன்றுபோல் ஒருவர் மற்றவருக்காக இரவும் பகலும் பிறருக்கு நிம்மதி வழங்குவதற்காக தொண்டு செய்வதைக் கண்டேன்.

மேலும் கூறுகிறார்: M.T.A –வின் ஏற்பாடும் என்னை மிகவும் வியப்பிற்குள்ளாக்கி விட்டது. நான் பெனின் நாட்டின் National T.V –ன் டைரக்டராக இருந்துள்ளேன். இன்று வரை நான் நேரடி ஒளிபரப்பிற்கு இவ்வளவு சிறந்த ஏற்பாடுகள் இருப்பதைப் பார்க்கவில்லை. UNO –வின் நிகழ்ச்சிகளுக்கு கூட இவ்வளவு உயரிய முறையில் நீங்கள் செய்வது போன்று பல மொழிகளில் மொழிபெயர்ப்பு ஏற்பாடுகள் இருக்கவில்லை. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நபரும், தமது மொழியில் மாநாட்டின் சொற்பொழிவின் மொழிபெயர்ப்பைக் கேட்டு மாநாடு தனது நாட்டில் நடப்பதாக உணர்கிறார். அவரது மொழியில் அவரது சமுதாயத்தில் மாநாடு நடப்பதாக உணர்கிறார். நான் அஹ்மதிய்யத்திலிருந்து ஒரு விஷயத்தைக் கற்றுக் கொண்டேன். ஈமானை மற்ற எல்லா விஷயங்களை விட உயர்வாகக் கருத வேண்டும். உண்மைக்கு வெற்றி கிடைக்கும். ஆற்றல் பெற்றவர் எப்போதும் ஆற்றல் பெற்றவராக இருப்பதில்லை. மேலும் கூறுகிறார்: மாநாட்டில் கலந்து கொண்ட நான், ஒருவர் செயல்படுவதாக இருந்தால் இறைவனுடன் கொண்டு சேர்க்கும் வழி இன்றும் இருக்கிறது என்று கூறுவேன்.

மாநாட்டில் கலந்து கொண்ட கோங்கோ கன்சாஷாவைச் சார்ந்த ஒரு மாநிலத்தின் அட்டார்னி ஜெனரல் கூறுகிறார்: நான் 25 வருடங்களாக ஒரு மாஜிஸ்ட்ரேட் ஆக பணி செய்கிறேன். மாநாட்டை ஆழமாக ஆய்வு செய்தேன். ஒற்றுமையும் ஒருமைப்பாடும் இல்லை எனில் செல்வத்தால் எதுவும் செய்ய முடியாது என்று முடிவுக்கு நான் வந்து விட்டேன். நீங்கள் ஓர் உடலைப் போன்று ஆகி விட்டால் எல்லாமே சாத்தியமாகும். மாநாட்டின் தொண்டர்கள் ஓர் உடலைப் போன்று ஆகி விட்டனர். அவர்கள் சாத்தியமற்றதை சாத்தியமாக்கிக் காட்டினர். காட்டை தங்குவதற்கு தகுந்த இடமாக மாற்றினர். அங்கு எல்லா வசதிகளும் இருந்தன. சுத்தமான கழிப்பறை வசதி, தங்குமிடம் ஆகியவை இருந்தன. ரேடியோ, டி.வி நிலையங்கள் பல்வேறு மொழிகளில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிக் கொண்டிருந்தன. பல நாடுகளிலிருந்து வந்த ஏழை பணக்காரர்கள், பல்வேறு பொறுப்புகளை வகிப்பவர்கள், அரசியல்வாதிகள், அறிஞர்கள் ஒன்றாக இணைந்து பணி செய்தனர். 40 ஆயிரம் பேருக்கு உணவு, தண்ணீர் ஆகியவற்றுடன் மற்ற தேவைகளையும் கவனத்தில் கொள்வது ஓர் எளிய காரியமல்ல. ஆனால், இதனை ஆறாயிரம் தன்னார்வத் தொண்டர்கள் எந்த கூச்சலும் குழப்பமுமின்றி மகிழ்ச்சியாகச் செய்தனர். அந்த தன்னார்வத் தொண்டர்களில் மூன்று வயதிலிருந்து 80 வயது வரையிலுள்ள தொண்டர்கள் இருந்தனர். அவர்கள் மற்றவருக்கு தொண்டு செய்து அதில் மகிழ்ச்சி அடைந்தனர். நான் எல்லா புறமும் சகோதரத்துவத்தையும் அன்பையும் கண்டேன்.

மேலும் கூறுகிறார்: அஹ்மதிய்யா ஜமாஅத் மிகச் சிறந்த முறையில் பணி செய்கிறது. இது எந்த வகையிலும் தோல்வி அடைய முடியாது. குறைவடையவும் முடியாது – இன்ஷா அல்லாஹ். மேலும் கூறுகிறார்: நான் எல்லாரிடமும் கூற விரும்புகிறேன். ஜமாஅத்தை நெருக்கத்தில் பாருங்கள். எல்லாம் தானாகவே தெரிய வரும். மேலும் கூறுகிறார்: நான் மாநாட்டிற்கு வந்த முதல் அரை மணி நேரம் தான் ஓர் அந்நியத் தன்மையை உணர்ந்தேன். அதற்குப் பிறகு மக்கள் தாமாகவே வந்து என்னைச் சந்தித்துக் கொண்டிருந்தனர். ஒருவர் மற்றவரை பல வருடங்களாக அறிந்தது போன்று தெரிந்தது.

இதுவும் மாநாட்டின் ஒரு சிறப்பம்சமாகும். மாநாட்டில் பணி செய்பவர்கள் மட்டும்தான் மற்றவரிடம் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. மாநாட்டில் கலந்து கொள்பவரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். இதன் மூலம் ஓர் அமைதியான தப்லீக் நடக்கிறது. இந்த அடிப்படையில் இங்கு டியூட்டி கொடுப்பவர்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தும் அதே நேரத்தில் அவர்கள் தமது செயல் மூலமாகவும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை கொண்டு சேர்க்கின்றனர். மற்றவர்களை தாக்கத்திற்கு உள்ளாக்குகின்றனர். இந்த அடிப்படையில் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகின்றனர். இங்கு கலந்து கொள்ளும் அஹ்மதிகளும் கூட அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவியுங்கள். அவர்கள் மூலமாகவும் அல்லாஹ் அமைதியாக ஒரு தப்லீகை செய்ய வைக்கின்றான்.

நைஜர் நாட்டுத் தலைவரான முக்கிய அமைச்சர் மாநாட்டில் கலந்து கொண்டு கூறுகிறார்: நான் கிட்டத்தட்ட முழு வருடமும் பயணம் செய்து கொண்டே இருக்கிறேன். பல கூட்டங்களில் கலந்து கொள்கிறேன். ஆனால், இன்று வரை இந்த அளவுக்கு ஆன்மீகமான ஒரு சூழலைக் கண்டதில்லை. மாநாட்டில் கலந்து கொண்டதில் எனக்கு வானத்திலிருந்து ஓர் ஒளி இறங்குவதாகவே தென்பட்டது. பிறகு பைஅத் நடைபெறும் காட்சியைப் பார்த்து விட்டு கூறுகிறார்: பைஅத்தே ரிழ்வானில் கலந்து கொண்டதாக எனக்கு தோன்றியது.

ஜப்பானைச் சார்ந்த ஒரு நண்பரும், பிரபல அறிஞரும், Anglican சர்ச்சின் தலைவருமான Aoyama யூசுஃப் சாஹிப் கூறுகிறார்: அஹ்மதி இளைஞர்கள், சிறுவர்களின் தொண்டு செய்யும் உணர்வு பாராட்டத்தக்கது. உலகில் எந்தவொரு சமுதாயத்திலும் இந்த அளவுக்கு தன்னார்வத் தொண்டாற்றுகின்ற இளைஞர்கள் இல்லாததற்கு சமம் என்ற நிலையைத்தான் காண முடிகின்றது. இந்தக் காட்சி ஆண்டு மாநாட்டில் மட்டுமே காணக் கிடைக்கிறது. பல இளைஞர்கள் ஓடியோடி உணவு பரிமாறுவதில் ஈடுபடுகின்றனர். இன்னும் சிலர் விருந்தினர்களை அழைத்து வருவதற்காக வாகனங்களை ஏற்பாடு செய்வதில் கவலை உடையவர்களாக இருக்கின்றனர். சிறுவர்கள் தண்ணீர் கொடுக்கிறார்கள். வயோதிகர்களும் பல பணிகளில் மூழ்கியிருக்கின்றனர். குறிப்பாக சிறுவர்களின் எழுச்சிமிகு பங்களிப்பை அஹ்மதிய்யத்தின் நிகழ்காலமும் எதிர்காலமும் ஒளிமயமானது என்பதை எடுத்துக் கூறுகிறது – இன்ஷா அல்லாஹ்.

பிறகு உகாண்டாவின் Vice President எட்வார்டு செகாண்டி (Edwerd Ssecandy) வந்திருந்தார். அவருக்கு ஆண்டு மாநாடு பற்றி சுற்றிக் காண்பிக்கப்பட்ட போது தொண்டு செய்பவர்கள் எல்லாரும் தன்னார்வர்கள் என்று கூறப்பட்டது. அவர் மிகவும் வியந்து போனார். பாதுகாப்புப் பணியில் ஈடுபடுபவர்களைப் பார்த்து கூறினார்: மற்ற வேலைகளைச் செய்பவர்கள் தன்னார்வர்கள்தான். ஆனால் இந்த பாதுகாப்புப் பணி செய்பவர்கள் கண்டிப்பாக பணம் வாங்குபவர்களாகவே இருப்பர். இங்கு பணி செய்பவர் அனைவரும் தன்னார்கள்தான் என்று கூறப்பட்ட போது மிகவும் வியந்து போனார். பிறகு கூறினார்: என் வாழ்வில் முஸ்லிம்களின் இவ்வளவு பெரிய ஒன்றுகூடலை நான் பார்த்ததில்லை. எல்லாரும் அமைதியுடன் ஒன்றுபட்டிருக்கின்றனர். நான் முஸ்லிம்களைக் குறித்து கேள்விப்பட்டதெல்லாம் இவர்கள் ஒருவரையொருவர் வெட்டக் கூடியவர்கள்; கஷ்டத்தை ஏற்படுத்துபவர்கள் என்பது தான். உகாண்டாவிலும் முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். இப்போது என் கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். உண்மையான முஸ்லிம்கள் யார்? எது உண்மையான இஸ்லாமிய போதனை? என்பது இப்போது எனக்கு தெரிய வந்துள்ளது.

ரஷ்யாவிலிருந்து வந்த பெண் விருந்தினர் Dr. Irina Syrinco என்பவர் மாநாட்டிற்கு வந்தார். இவர் ரஷ்யாவின் Institute of Oriental Studies –ன் பேராசிரியராக உள்ளார். இவர் கூறுகிறார்: ஜமாஅத்தின் மாநாட்டில் கலந்து கொள்வது எனது வாழ்வின் அனுபவமாகும். அதுவும் கூட மறக்க முடியாத அனுபவமாகி விட்டது. மாநாட்டின் ஏற்பாடுகளும் திட்டங்களும் உயர்வாக இருந்தன என்பதால் மட்டுமல்ல. மாறாக, மிகப்பெரிய காரணம் மாநாட்டின் சூழல் மிகவும் ஆன்மீகமயமாக இருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத் புதிதாக வருகிற ஒவ்வொருவரையும் மிக உயரிய விருந்தோம்பலுடன் இஸ்லாத்தின் உண்மையான புதிய முகத்தைக் காட்டித் தருகின்றது.

ஐஸ்லாந்திலிருந்து ஒரு விருந்தாளி வந்திருந்தார். அவர் கூறுகிறார்: இந்த மாநாட்டில் கலந்து கொள்வது எனது வாழ்வின் மிகவும் அழகிய அனுபவமாக இருந்தது. 40 ஆயிரம் பேரை ஒன்றாகப் பார்த்ததில் எனது ஈமான் மீண்டும் உயிர் பெற்றது. உலகில் ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலிருந்தும் வந்த இவ்வளவு பெரும் கூட்டம் மிகவும் அன்புடனும் அமைதியுடனும் ஒன்றாக இணைந்திருப்பதைப் பார்த்து என் உள்ளத்தில் ஆழிய தாக்கம் ஏற்பட்டது. நான் உங்கள் விருந்தோம்பலுக்காக மிகவும் நன்றி செலுத்துகிறேன். இஸ்லாத்தின் உண்மையான அமைதியின் தூதைப் பரப்ப முயற்சி செய்வேன்.

இந்த நமது சூழ்நிலையைப் பார்த்து மக்கள் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். கலந்து கொள்பவர்களுக்கு தீய தாக்கம் ஏறபடத்தக்க ஒரு சம்பவத்தைப் பார்க்க நேர்ந்தாலும் கூட அல்லாஹ்வுக்கே நன்றி செலுத்த வேண்டும். இம்மக்களுக்கு மத்தியில் அது நடைபெறவில்லை. அது இறைவனின் குறைகளை மறைக்கும் தன்மையால் நடைபெற்றது. இவ்வருடமும் நடக்கக் கூடாத சில சம்பவங்கள் நடந்து விட்டன. சிலர் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். இதனால் ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படக் காரணமாக இருக்கின்றனர் என்பது மட்டுமின்றி வெளியிலிருந்து வருபவருக்கும் இவர்கள் இஸ்லாத்தை விட்டும் விலகிப் போகிறார்கள் என்ற செய்தியை தருகிறார்கள். மக்கள் எவரைப் பற்றி நல்லெண்ணம் கொள்வதில்லையோ அத்தகையோருடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தையும் சேர்த்து விடுவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வோர் அஹ்மதியும் மாநாட்டின் போது குறிப்பாகவோ பொதுவாகவோ எந்நிலையிலும் இவ்விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஈரானிலிருந்து வந்த குழுவின் ஒரு நண்பர் கூறுகிறார்: மாநாட்டில் ஏற்பாடுகள் மிகவும் உயர் தரமானவையாக இருந்தது. மிகவும் ஒழுங்கமைப்புடன் தன்னார்வர்கள் எல்லா பணிகளையும் செய்தனர். எனக்கு பல்வேறு நாடுகளிலிருந்து வந்தவர்களுடன் சந்திப்பு நிகழ்ந்தது. எத்தனை நாடுகளிலிருந்து

மக்கள் வந்துள்ளனர் என்று நான் பட்டியலிடத் தொடங்கினேன். எனக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது. எனது பட்டியலில் முப்பது வரை எண்ணிக்கை வந்து விட்டது.

அவர் கூறுகிறார்: மூன்றாம் நாளில் பைஅத் நடந்த கூட்டத்தில் பார்த்தேன். என்னைப் பொருத்தவரை அது மிகவும் ஆன்மீக அனுபவமாக இருந்தது. பல்வேறு மக்களின் முகங்களை உணர்ச்சிப்பூர்வமாக இருக்கக் கண்டேன். உண்மையிலேயே இது ஓர் ஒளிமயமான காட்சியாக இருந்தது.

பிறகு மக்தூனியாவிலிருந்து ஒரு பெண்மணி வந்திருந்தார். இவரது குழுவும் பெரியது. இவரது கருத்தைக் கூறுகிறேன். அவர் கூறுகிறார்: ஜமாஅத் என்னை மிகவும் வியப்பிற்குள்ளாக்கியது. ஒவ்வொரு விருந்தாளிக்கும் தேவையான ஒவ்வொரு பொருளும் அங்கு இருந்தது. நான் மிகவும் தாக்கத்திற்குள்ளானது சிறுவர்களால்தான். அவர்கள் விருந்தாளிகளுக்கு சேவை செய்தனர்.

குயேடே மாலாவின் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கியோஸிலேஸ் என்பவர் கூறுகிறார்: விருந்தாளிகளுக்கான சேவை பொறாமை கொள்ளத்தக்கது. சிறுவர்களை டியூட்டியில் ஈடுபட வைத்து செயல்ரீதியாக அவர்களை வருங்காலத்திற்காக தயார் செய்வதும் அதன் மூலம் அவர்கள் இதே போன்று தமது பொறுப்பை வருங்காலத்தில் நிறைவேற்றும் அளவில் ஆயத்தம் செய்வதும் பின்பற்றத்தக்கதாகும். செயலளவில் ஒவ்வோர் அஹ்மதியும் பொதுவாக அங்கு கலந்து கொள்பவர்கள் கொள்கைப் பிடிப்பை மேம்படுத்தக் காரணமாகிற நிலையில் மாநாட்டில் ஒவ்வொருவரின் செயலிலும் சீர்திருத்தத்திற்காக கவனம் ஏற்படுகிறது. அதே வேளையில் மற்றவரையும் தாக்கத்திற்குள்ளாக்குகிறது. இது தர்பிய்யத் என்ற அளவில் மட்டும் நின்று விடுவதில்லை. அது எந்த அளவு பரந்துள்ளது எனில் அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்கு புதிய புதிய வழிகள் பிறக்கவும் செய்கின்றன. ஜமாஅத் மக்களின் அசல் நோக்கம் தர்பிய்யத் ஆகும். ஆனால், மற்றவர்கள் இங்கு வருவதால் தப்லீகிற்கும் புதிய வழிகள் திறக்கின்றன. விருந்தாளிகள் இதனை வெளிப்படுத்துகிறார்கள். இஸ்லாத்தின் அழகிய போதனை உங்களுக்கு வெளியாகி இருக்கவில்லை. ஊடகங்கள் அல்லது சில முஸ்லிம் பிரிவுகள் இஸ்லாத்தை எடுத்து வைக்கின்றன. அதுவே எங்கள் மனதில் சூழ்ந்துள்ளது. இதனை பலரும் வெளிப்படுத்தினர். முஸ்லிம் என்ற பெயரைக் கேட்டதும் தீவிரவாதம், அநீதி என்ற காட்சியே கண்முன் வருகிறது. ஆனால், இன்று இஸ்லாமிய போதனையின் செயல் முன்மாதிரியைப் பார்த்து இன்று நாம் நமது வட்டத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தின் அடிப்படையில் நமது சூழலில், நமது மக்களிடம் இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் பார்க்க வேண்டும் என்றால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் சென்று பாருங்கள் என்று கூறலாம்.

இது தொடர்பாக இன்னும் பலரின் தாக்கங்களையும் எடுத்து வைக்கிறேன்.

குயேடே மாலாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆலியானா சாஹிபா கூறுகிறார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மாநாட்டில் நான் முதன்முறையாக கலந்து கொள்கிறேன். இது எனக்கு அழகிய அனுபவமாகும். இஸ்லாத்தின் உண்மையான போதனையை தெரிந்து கொள்ள முடிந்தது. ஜமாஅத்தின் அமைப்பினால் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இனிமையான விருந்தோம்பல் அன்பு, நேசம், பொறமைப்படத்தக்கது. குறிப்பாக பல்வேறு எண்ணங்கள் மற்றும் சமுதாயங்களுக்கிடையில் அசாதாரண அன்பு நேசத்தின் மிகச் சிறந்த முன்மாதிரி கண்ணியப்படுத்தத்தக்கது. மாநாட்டின் கலந்து கொள்வது எனது வாழ்வின் மிகச் சிறந்த நினைவாகும். இதில் நான் மகிழ்ச்சியை உணர்கிறேன். இங்கிருந்து பெற்ற மறக்க முடியாத நினைவு மலர்களை எடுத்துக் கொண்டு கொயிட்டிமாலா போகிறேன். வருங்காலத்திலும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் நற்பேறு கிடைக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் செல்கிறேன்.

ஜமாஅத் அல்லாத நண்பர் ஸக்கரிய்யா ஸஅதி சாஹிப் கூறுகிறார்: (இவர் Phd. செய்து வரும் மாணவர் ஆவார்.) ஆண்டு மாநாடு மிகவும் அழகிய ஒரு நிகழ்ச்சி என்று கருதுகிறேன். இஸ்லாத்தின் அழகிய படத்தைக் காட்டுவதற்காக இந்த வழி மிகவும் பொருத்தமானதாகும். மேலும் இந்த மாநாட்டினால் இன்னொரு விஷயம் தெளிவாக கண்முன் வருகிறது. அதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத் முழு உலகின் மக்களுக்கும் எப்போதும் பணி செய்து வருகிறது. ஆப்பிரிக்காவின் ஏழைகளுக்கு மருத்துவ முகாம், குடிநீர் வழங்கும் பணிகளைச் செய்கிறது.

பிறகு இன்னொரு ஜமாஅத் அல்லாத நண்பர் முஸ்லிம் அல்லாதவர் என்று நினைக்கிறேன். அவரது பெயர் டோனி வைட்டிங். அவர் கூறுகிறார்: ஜமாஅத்தைப் பார்த்து எனக்கு மிகவும் பலமான ஓர் எண்ணம் ஏற்படுவதை உணர முடிந்தது. பிரிட்டன் மக்கள் உங்களிடமிருந்து அதிகமாக கற்க முடியும். உதாரணமாக, Community என்றால் என்ன? எவ்வாறு ஒருயிர் ஆகி அமைதியை நிலைநாட்ட முயற்சி செய்யலாம்? எவ்வாறு இளைஞர்களை செயல்பட வைத்து அமைதியை நிலைநாட்டுவதில் ஈடுபடுத்தி உலக நலனிற்காக அவர்களை மதிப்பு வாய்ந்த செயல் அங்கமாக மாற்றலாம்? உங்கள் Community –ஐப் பார்த்து ஏன் முழு உலகத்திலும் இருந்து உங்கள் இயக்கத்தில் மக்கள் இணைகிறார்கள் என்பதில் எனக்கு ஒருபோதும் வியப்பு ஏற்பட்டதில்லை. புதிய அஹ்மதிகளுக்கும் நல்ல தாக்கம் ஏற்பட்டுள்ளது. இது அவர்களின் தர்பிய்யத்திற்கு காரணமாக அமைகிறது.

குயேடே மாலாவின் புதிதாக பைஅத் செய்த Luis Alfredo சாஹிப் கூறுகிறார்: என்னைப் பொருத்தவரை உண்மையான இஸ்லாத்தின் போதனையை செயல்ரீதியாக ஒரு ஜமாஅத் எடுத்து வைக்கிறது என்றால், அத்தகைய ஜமாஅத் உறுப்பினராக இருப்பது மகத்தான வாய்ப்பாகும். அதற்கு ஓர் உதாரணம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடாகும். பல்வேறு சமுதாயங்கள், தலைமுறைகள், நிறத்தினர் ஒருவருக்கொருவர் சகோதரத்துவம் மற்றும் அன்பில் செயல் முன்மாதிரியாக விளங்குகின்றனர். அவர்கள் தமது முழக்கமாக 'எல்லாரிடமும் அன்பு; எவரிடமும் இல்லை வெறுப்பு' என்பதை வைத்துள்ளனர். அதன் செயல் முன்மாதிரியை ஆண்டு மாநாட்டில் காண முடிந்தது.

பிறகு பெல்ஜியத்தின் பெண்மணி பாத்தூ மாதா தியாலூ (Fatoumata Diallo) சாஹிபா தமது இரண்டு குழந்தைகளுடன் மாநாட்டில் கலந்து கொண்டார். குழந்தைகளுடன் பைஅத்தும் செய்தார். அவர் கூறுகிறார்: எனது கணவர் எனக்கு ஜமாஅத்தை அறிமுகம் செய்தார். ஆனால், ஜமாஅத்தை குறித்து நான் ஒரு குழப்பத்தில் இருந்தேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தும் மற்ற பிரிவுகளைப் போன்ற ஒரு பிரிவு தான் என்று சிலர் கூறுகிறார்கள். இன்னும் சிலர் இவர்கள் முஸ்லிம்களே இல்லை என்கிறார்கள். இந்த வகையில் நான் மாநாட்டில் கலந்து கொண்டு உண்மையை அறிய விரும்பினேன். மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு எனக்கு தெரிய வந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத் மக்கள் மிகவும் நல்லவர்கள்; மிகவும் பண்பட்டவர்கள்; எல்லாரையும் விட உண்மையான முஸ்லிம்கள் ஆவர்.

எனது உரைகளைக் குறிப்பிட்டவாறு கூறுகிறார்: அவற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஹதீஸ்கள் இருந்தன. எளிமை, பணிவு, அமைதி, நிம்மதி, விவேகம் ஆகியவற்றிற்கான போதனை இருந்தது. அவர் கூறுகிறார்: இறைவனுக்கு நன்றி. அவன் எமக்கு ஒரு வழியைக் காட்டினான். அது ஈடேற்றத்தின் பக்கம் எடுத்துச் செல்வதாக இருந்தது. பிறகு நன்றியும் தெரிவிக்கிறார். அவர் கூறுகின்றார்: பல தன்னார்வத் தொண்டர்கள் இரவும் பகலும் பெரும் களைப்புக்கு இடையிலும் எங்களது நிம்மதியை கருத்தில் கொண்டனர். எமக்கு மிகவும் கண்ணியம் வழங்கினர்.

ஜப்பானின் பேராசிரியர் (இவரை முதலில் குறிப்பிட்டேன்) கூறுகிறார்: உலகின் 80 நாடுகளிலிருந்து 30 ஆயிரத்தை விட அதிகமாக மக்கள் கலந்து கொண்டனர். ஆண்டு மாநாட்டையும் முதல் நாளன்று ஏற்றப்பட்ட கொடிகளையும் பார்க்கும்போது அது எனக்கு ஐக்கிய நாட்டு சபையைப் படம் பிடித்துக் காட்டக் கூடியதாக இருந்தது. ஆனால், காலத்தின் கலீஃபாவின் இறுதி சொற்பொழிவைக் கேட்ட போது என் கருத்து மாறியது. ஐக்கிய நாடுகளின் சபையில் ஒவ்வொரு நாட்டின் தூதுவரும் கலந்து கொள்கின்றனர். ஒவ்வொருவரும் அது சரியோ தவறோ தனது பயனிற்கான பேச்சைப் பேசுகின்றனர். ஆனால், காலத்தின் கலீஃபாவோ முழு உலகிற்கும் நீதியைப் பற்றி எடுத்துக் கூறுகின்றார்கள். இது ஆண்டு மாநாட்டை ஐக்கிய நாடுகளின் சபையை விட்டும் வேறுபடுத்தி அதற்கு தனிச்சிறப்பை வழங்குகிறது.

இம்முறை அல்லாஹ்வின் அருளால் ஊடகங்களிலும் சென்ற வருடங்களை விட அதிகமான கவரேஜ் ஏற்பட்டுள்ளது. தலைமையக பிரஸ் மீடியாவின் நமது அலுவலர்களின் அறிக்கையானது முதலில் மாநாடு கவரேஜ் ஆரம்பமானது. BBC ரேடியோ போன்று எக்கானாமிஸ்ட் தி இன்டிபெண்டன்ட், தி கார்டியன், சேனல் ஃபோர், டெய்லி டெலிகிராப், டெய்லி எக்ஸ்பிரஸ், டெய்லி மெயில் – இது உலகில் எல்லாவற்றையும் விட அதிகமாக வாசிக்கப்படக்கூடிய online பத்திரிகையாகும். The Sun – இது யூ.கே –வில் அதிகமாக வாசிக்கப்படும் பத்திரிகையாகும். ரேடியோ BBC, இலண்டன் Live TV, Sky News, Channel 5 TV, ஸ்காட்டிஷ் டி.வி., பல்பஸ்ட் டெலி கிராப், Autingham Post ஆகிய பத்திரிகைகளில் மாநாடு கவரேஜ் இருந்தது. இவை தவிர BBC –ன் பல வட்டார நிலையங்களிலும் கவரேஜ் இருந்தது. இவர்களின் கருத்தின்படி அச்சு ஊடகங்கள் மற்றும் online ஊடகங்கள் மூலம் வாசிக்கும் வாசகர்களின் எண்ணிக்கை 41 மில்லியன் பேர் ஆகும். ரேடியோ கேட்பவர்களின் எண்ணிக்கை 2.48 மில்லியன். டி.வி பார்ப்பவர்களின் எண்ணிக்கை ஒரு மில்லியன். Social மீடியா மூலம் 91 மில்லியன் மக்கள் வரை செய்தி போய் சேர்ந்துள்ளது. இவ்வாறு இவர்கள் அனைவரின் எண்ணிக்கையும் கூட்டினால் மொத்த எண்ணிக்கை 135 மில்லியன் ஆகிறது.

அவர்கள் எச்சரிக்கையுடன் அறிக்கை தந்தவாறு எழுதுகிறார்கள்: பத்திரிகையின் எல்லா செய்தியையும் மக்கள் வாசிப்பதில்லை என்று கருதினால் இதன் இருபது சதவீதம் பேர் பார்த்தால் 18 மில்லியன் பேர் வரை முழுமையாக வாசிப்பவர்கள் ஆவர். அவர்கள் வரை நமது செய்தி போய் சேர்ந்துள்ளது. மாநாட்டின் செய்தியும், அன்பு, நேசம், அமைதியின் தூதுச் செய்தி சேர்ந்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இந்த வருடம் தான் இந்த 20 சதவீதம் என்ற வழிமுறையை எடுத்துள்ளோம். எனினும் 20 சதவீதத்தை மட்டும் எடுத்தாலும் சென்ற வருடத்தை விட அது 6 மில்லியன் பேருக்கு மேல் அதிகமாக

மக்களுக்கு செய்தி போய் சேர்ந்துள்ளது. மொத்தமாக எடுத்தால் எனது கருத்தின்படி 100 மில்லியன் பேருக்கு மேல் செய்தி போய் சேர்ந்துள்ளது. இந்த அடிப்படையில் கடந்த வருடம் கணக்கிடப்படவில்லை. இந்த கவரேஜ் குறித்து நமது பிரஸ் மற்றும் மீடியா பிரிவு கூட ஆச்சரியமடைந்துள்ளது. அல்லாஹ்வின் சிறப்பான அருள் இவ்வருடம் இறங்கியுள்ளது.

யூ.கே –வின் தப்லீக் துறை மீடியா குழுவின் அறிக்கையின்படி இலண்டனின் South west –ன் பத்திரிகையில் 3 கட்டுரைகள் வந்துள்ளது. இதனை online –ல் வாசிப்போர் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் ஸ்காட்லேண்டில் ஹெரால்ட் மேகஸைனில் மாநாடு பற்றி செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இதன் வாசகர்கள் சுமார் ஒன்றே முக்கால் இலட்சம் என்று கூறப்படுகிறது. இது தவிர பெல்ஜியத்தின் இரு தேசிய பத்திரிகைகளில் மாநாடு பற்றி செய்தி வந்துள்ளது.

கானாவிலிருந்தும் ஓர் பெண் பத்திரிகையாளர் கேமரா மேனுடன் வந்து கலந்து கொண்டார். அங்கு TVG –ல் ஞாயிறு முதல் வியாழன் வரை மாநாட்டின் செய்திகள் வந்தன. இது தவிர பிரபல பத்திரிகையான கானா டைம்ஸில் மாநாடு பற்றிய கட்டுரை வந்தது. எச்சரிக்கையுடன் கணக்கிட்டால் கூட டெனிவின் சேனல் பார்ப்பவர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தை விட அதிகமாகும். டெனிவின் பத்திரிகை வாசிப்பவர் மூன்று இலட்சத்தையும் விட அதிகமாக இருக்கின்ற நிலையில் இந்த பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டுரையினைப் பார்த்தவர்களின் கருத்துக்களையும் காணக் கிடைக்கிறது. மக்கள் நம்மைப் பற்றிய கட்டுரையின் கீழ் தமது கருத்தை எழுதியுள்ளனர். சில கருத்துக்கள் கீழ்வருமாறு:

அஹ்மதிய்யா ஜமாஅத் பிரிவு மற்ற மற்ற முஸ்லிம் பிரிவுகளை விட வித்தியாசமானது. மற்ற முஸ்லிம்கள் இவர்களை வெறுக்கின்ற நிலையிலும் கூட இவர்களே சரியான பொருளில் அமைதியை விரும்பக் கூடியவர்கள் ஆவர்.

பிறகு ஒருவர் இவ்வாறு எழுதியுள்ளார்: அஹ்மதிய்யா ஜமாஅத் அமைதியை விரும்பும் ஜமாஅத் ஆகும். சன்னி முஸ்லிம்கள் இவர்கள் மீது அநீதியிழைக்கின்றனர். காஃபிர் என்கிறார்கள். பிறகு கூறுகிறார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத் மக்கள் இந்துக் கடவுளர்களை அதாவது ஸ்ரீ கிருஷ்ணரை இறைத் தூதராகக் கருதுகின்றனர். மிகவும் அமைதியை விரும்பக் கூடிய மக்களாவர். மற்ற முஸ்லிம்களை விட்டும் வேறுபட்டவர்கள் ஆவர். முழு உலகிலும் இவர்கள் மீது அநீதியிழைக்கப்படுகிறது.

பிறகு சில பத்திரிகைகளின் வாசகர்கள் இதனையும் எழுதியுள்ளனர்: அஹ்மதிய்யா இயக்கத்தின் செய்தியைப் படிக்கும் போது நன்றாக இருந்தது. இஸ்லாத்தை கடுமையான மார்க்கம் என்று கருதுபவர்களிடம் இந்தத் தாக்கம் ஏற்பட வேண்டும் என்று கூறினர்.

பிறகு ஒருவர் எழுதுகிறார்: முஸ்லிம்கள் தீவிரவாதத்திற்கு எதிராக எப்போது குரல் எழுப்புவார்கள் என்று மக்கள் கூறுகின்றனர். எழுதக்கூடியவர் எழுதுகிறார்: பத்திரிகையில் படித்தது போன்று அஹ்மதி முஸ்லிம்கள் பரந்த அளவில் தீவிரவாதத்திற்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றனர். அஹ்மதிகள் நீண்ட காலமாக தீவிரவாதத்தை எதிர்த்து வன்மையாகக் கண்டித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். இவர்கள் அதனை கவனிப்பதில்லை. மீடியாக்களோ மற்ற செய்திகளை அடிப்படையாக வைத்தே முஸ்லிம்களைப் பற்றி பரிசீலனை செய்கின்றனர்.

ஒருவர் எழுதுகிறார்: பிரான்ஸில் இது வெளி வந்துள்ளது. நான் எதிர்பார்க்கிறேன். பிரான்ஸிலும் இந்த மாநாடு நடைபெற வேண்டும். தீவிரவாதிகள் தமது கருத்தை மற்றவர் மீது திணிப்பதை நிறுத்த வேண்டும்.

மக்களது தாக்கங்கள் இவ்வாறும் உள்ளன. அம்மக்கள் மிக தாமதமாக இதனை உணர்கிறார்கள். ஆனால், நூறாண்டை விட அதிகமாக அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த வேலையைச் செய்கிறது. பிரஸ் மீடியாக்கள் நமக்கு கவரேஜ் தருவதில்லை. இதில் அவர்களை மகிழ்ச்சியூட்டும் காரியங்கள் இல்லை. ஏனெனில் பிரஸ்கள் கவரேஜ் தந்தவுடன் மக்கள் இந்த வேலைகள் இப்போது தான் நடந்தது போலும் என்று கருதுகின்றனர்.

MTA ஆப்பிரிக்கா மற்றும் பிற சேனல்கள் மூலம் ஆப்பிரிக்காவிலும் கவரேஜ் கிடைத்தது. யூ.கே –வின் ஆண்டு மாநாடு முதல் முறையாக MTA ஆப்பிரிக்கா மூலமாகவும் MTA International மூலமாகவும் காண்பிக்கப்பட்டது. மேற்கு கிழக்கு ஆப்பிரிக்காவில் நூற்றுக்கணக்கானவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பினர். MTA ஆப்பிரிக்கா தவிர பத்திற்கும் மேற்பட்ட டி.வி சேனல்கள் மாநாட்டை ஒளிபரப்பியது. கானாவின் National Television, சைன்பிளஸ் டி.வி கானா, டிவி ஆப்பிரிக்கா, சொராலியோன் நேஷனர் டி.வி, MI டி.வி நைஜீரியா ஆகியவற்றிலும் பெனினிலும் ஒரு சேனல் E TV –யில் எனது உரை முழுவதும் ஒளிபரப்பப்பட்டது. காங்கோபிரஸில் ஒரு வரம்பிற்குட்பட்ட வகையில் மாநாட்டின் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டது. உகாண்டாவின் பிராட் காஸ்டிங் கார்ப்பரேஷன் முதலில் மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் காட்ட முடியாது என்று வருத்தம் தெரிவித்தது. சரியாக கடைசி நேரத்தில் மாநாட்டின் கவரேஜிற்கு அனுமதி வழங்கியது. உகாண்டா தவிர ருவேண்டாவிலும் மாநாடு ஒளிபரப்பு காண்பிக்கப்பட்டது. மீடியா மாநாட்டை கவரேஜ் செய்ததன் விளைவாக சில பைஅத்துகளும் நடந்தன.

காங்கோ பிராஸிலில் ஒரு கிறித்தவ நண்பர் மிஸ்டர் வேலிக்கு யூ.கே ஆண்டு மாநாட்டைக் காண மிஷன் ஹவுஸிற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் மூன்று நாள்களும் மாநாட்டைக் கேட்டார். மாநாடு முடிந்ததும் கூறினார்: எனக்கு முதலில் முஸ்லிம்களைப் பற்றிய பயம் இருந்தது. இங்கு வந்து பார்க்கும் போது ஒவ்வொரு பக்கமும் அன்பு நேசத்தின் பேச்சுக்களே நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகள் என்னை உலுக்கி விட்டது. ஜமாஅத்தின் உண்மைக்கு வேறு எந்த ஆதாரமும் எனக்கு தேவையில்லை. எனவே, நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகிறேன் என்று அவர் கூறினார்.

பிறகு ஒரு உள்ளூர் தலைவரின் மனைவிக்கு மிகவும் தப்லீக் செய்யப்பட்டது. ஆனால், பைஅத் செய்ய வராமல் இருந்தார். இம்முறை அப்பெண் மாநாட்டின் நடவடிக்கைகளைப் பார்த்தார். எனது உரையைக் கேட்டார். பிறகு கூறினார்: இந்த சொற்பொழிவு என்னை ஜமாஅத்தில் இணையுமாறு கட்டாயப்படுத்தி விட்டது. ஏனெனில் இங்கு உண்மை மட்டுமே உள்ளது. வாழும் முறை கற்றுத் தரப்படுகிறது. நான் சில முன்மாதிரிகளையே தந்துள்ளேன். என்னிடம் எண்ணற்ற சம்பவங்கள் வந்தன. மேலும் வரவும் செய்யும். அல்லாஹ்வின் அருளின் வட்டம் விரிந்து கொண்டே செல்கிறது. இந்த அடிப்படையில் நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் வட்டமும் கூட விரிந்து கொண்டே செல்ல வேண்டும். ஏனெனில் அதன் மூலம் நாம் 'லஅஸீதன்னகும் – நான் உங்களுக்கு அதிகமாக வழங்குவேன்' என்ற இறைவனின் வாக்குறுதிக்கு வாரிசாக ஆவோம். அல்லாஹ் நமக்கு தரும் வெகுமதிகளை மேலும் விரிவுபடுத்திக் கொண்டே செல்வானாக!

எனவே, மாநாட்டில் கலந்து கொள்ளும் ஒவ்வோர் அஹ்மதியும் இங்கு கலந்து கொள்ளாதவராக இருந்தாலும் உலகில் எங்கேனும் பார்த்துக் கொண்டிருந்தாலும் எல்லாருக்கும் நன்றி செலுத்துவதை அதன் எல்லை வரை கொண்டு செல்ல வேண்டும். அதற்கு ஒரே வழி நாம் இறைவனது கட்டளைகளின்படி செயல்படுபவர் –களாக வேண்டும். அல்லாஹ் எல்லாருக்கும் அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

மேலும் நிர்வாகத்திடமும் நான் கூறுவேன். நேரம் இல்லாததால் நிர்வாகம் பற்றி கூறவில்லை. சில குறைகள் சில இடங்களில் இருந்தன. எனக்கு தகவல் கிடைத்தது. சில துறைகளில் ஸ்கேனிங், பார்க்கிங் மற்றும் டியூட்டி துறைகளில் சில குறைகள் தென்பட்டன. எனவே நாம் அதனை இன்னும் நன்றாக திட்டமிட வேண்டும். அதற்காக இப்போதிருந்தே நிர்வாகம் பணியைத் தொடங்க வேண்டும். என்ன திட்டமிட வேண்டும்? எவ்வாறு குறைகளை அகற்றலாம்? எவ்வாறு மிகச் சிறந்த ஏற்பாடு செய்யலாம் என்று சிந்தனை செய்யுங்கள். அதற்கான அறிக்கையை எனக்கு தாருங்கள். அல்லாஹ் அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

## 122 –வது காதியான் ஆண்டு மாநாடு [ஆண்டு மாநாடு தொடங்கப்பட்டதிலிருந்து 125 –வது வருடம்]

*ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் காதியான் ஆண்டு மாநாட்டை 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 26, 27, 28 (திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில்) தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் எண்ணத்துடன் அதற்காக தயாராகத் தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இறைவனுக்காக நடத்தப்படும் இம்மாநாட்டிலிருந்து அருள்களைப் பெறுவதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாக நடப்பதற்கும் நல்ல ஆன்மாக்கள் நேர்வழியைப் பெறுவதற்கும் அது காரணமாக இருப்பதற்கும் நீங்கள் தொடர்ந்து துஆ செய்யுங்கள்.*

*(தலைமையக நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத்)*

# 2016 ஆம் ஆண்டு மே மாதம் 17 -ஆம் தேதி சுவீடனின் தலைநகரான ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற ஒரு வரவேற்பு நிகழ்ச்சியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் எழுச்சிமிகு சொற்பொழிவைக் கேட்டு விருந்தினர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள்

இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மீது ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்-தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் சொற்பொழிவு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. பல விருந்தினர்களும் வெளிப்படையான முறையில் தங்களது உணர்வுகளையும் எண்ணங்களையும் தாக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களில் சில விருந்தினர்களின் தாக்கத்தைக் கீழே தருகின்றோம்.

★ ஒரு விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: கலீ∴பாவின் சொற்பொழிவு மிகவும் உயர்வானதாக இருந்தது. ஏனென்றால், இந்த சொற்பொழிவில் சுவீடனின் நிலைமைகள் பற்றி கலீ∴பாவின் ஆழமான பார்வையை நம்மால் பார்க்க முடிகிறது. குறிப்பாக இடம் பெயர்ந்து அகதிகளாக வந்திருப்பவர்களின் விவகாரங்கள் தொடர்பாக அவர்கள் கூறும் கருத்துக்கள் உள்ளத்தை ஈர்க்கக்கூடியவையாக இருக்கின்றன. சுவீடனில் இடம்பெயர்ந்து வருபவர்கள் தொடர்பாக கலீ∴பாவிற்கு ஒரு குறிப்பான பார்வை இருக்கின்றது. அதாவது, அகதிகளாக வந்திருப்பவர்கள் இங்குள்ள சமுதாயத்திற்காக தங்களது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். சுவீடனில் வசிப்பவர்-களையும் புறக்கணித்து விடக்கூடாது என்று அவர்கள் கூறிய இந்த விஷயம் மிகவும் நல்ல விஷயமாகும். சுவீடனில் எந்தவொரு அரசியல்-வாதியும் இத்தகைய விஷயங்களைக் கூறியதில்லை.

★ இன்னொரு விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: இது மிகவும் நல்லதொரு நிகழ்ச்சியாக எனக்கு பயனளிக்கின்றது. இஸ்லாம் மற்றும் உங்களது மார்க்கம் தொடர்பாக என்னால் ஒரு புதிய வடிவத்தைப் பார்க்க முடிகின்றது. அதிகமான மக்கள் உங்களது குரலைக் கேட்டால் பிறகு உலகம் மேலும் சிறந்ததவோர் இடமாக ஆகி விடும்.

★ இன்னொரு விருந்தாளி தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: இன்று எனக்கு பல விஷயங்களையும் பார்க்க முடிந்தது. இது மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் இதன் மூலம் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. கலீ∴பா இங்கு வந்ததற்காக நான் மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். கலீ∴பாவின் தூதுச் செய்தி எங்களுக்கு உணர்வூட்டி இருக்கின்றது. அதாவது நாம் எந்தவொரு சண்டையையும் பார்க்கின்றபோது அது தானே முடிவுக்கு வந்து விடும் என்று நினைத்து நமது கண்களை மூடிக் கொள்ளக் கூடாது. இது மிகவும் சிறந்த தூதுச் செய்தியாகும். நான் இதற்காக மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

★ இன்னொரு விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: இது மிகவும் நல்ல அனுபவமாக இருந்தது. மால்மோவிலுள்ள பள்ளிவாயிலுக்கு வருமாறு எனக்கு அழைப்பு வந்த போது நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஆனால், இங்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது எனது மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இல்லாமல் ஆகி விட்டது. நான் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகி-யுள்ளேன். கலீ∴பாவின் தூதுச் செய்தியை நான் கேட்டேன். எனக்கு அதில் ஞானம், அன்பு மற்றும் அமைதியே கிடைத்தது. ஏனென்றால், இது முழுக்க முழுக்க அன்பின் தூதுச் செய்தியாக இருக்கின்றது. எந்த அளவு கலீ∴பா அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டே இருந்தார்களோ அந்த அளவு நான் தாக்கத்திற்கு ஆளாகிக் கொண்டே இருந்தேன்.

★ ஒரு விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தை இவ்வாறு எடுத்துக் கூறுகின்றார்: மக்களை ஒரே இடத்தில் ஒன்று திரட்டுவது என்பது மிகவும் நல்ல விருப்பமாகும். ஆனால், இன்று உலகில் எத்தகைய சக்திகள் செயல்படு-கின்றனவென்றால் அவை மனிதனை, மனிதனை விட்டும் விலக்கி தொலைவில் கொண்டு செல்லவே விரும்புகின்றன. எல்லாரையும் ஒரே இடத்தில் ஒன்று திரட்டுவதில் நீங்கள் எல்லா வகையிலும் வெற்றி பெற்றுள்ளீர்கள். ஏனென்றால், நீங்கள் எங்களைச் சந்திக்கும்போது எங்கள் கண்கள் திறக்கின்றன. நாங்கள் மேலும் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் எங்களுக்கு கிடைக்கின்றன. காழ்ப்புணர்ச்சியை எதிர்த்துப் போராடுவதற்கான தைரியம் எங்களுக்கு கிடைக்கின்றது. இஸ்லாத்திற்கு எதிராக மிகவும் அதிகமாக காழ்ப்புணர்ச்சி இருந்து வருகின்றது. மேலும், பல மக்களும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நோக்கத்தைப் பற்றி தெரியாமல் இருக்கின்றனர். நாம் ஒன்றாக அமர்கின்றபோது அதன் மூலமாக பரஸ்பரம் நம்மில் ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்வது அவசியமாகின்றது. இவ்வாறு நாம் அமைதி மற்றும் ஒற்றுமையின் தூதுச் செய்தியை மேலும் பரப்ப முடியும்.

★ ஒரு விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: இங்கு என்னை வருமாறு நீங்கள் அழைத்ததில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது. கலீ∴பா கூறிய விஷயங்கள் எனக்கு மிகவும் நல்லதாகத் தெரிகிறது. இந்த தலைப்பில் அவர்கள் பேசியதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. இங்குள்ள பெரும்பாலான மார்க்கத் தலைவர்கள் இத்தகைய விஷயங்கள் தொடர்பாக பேசுவதில்லை. அதாவது, இடம்பெயர்ந்து வந்தவர்களது பொறுப்புகள் என்ன என்பதைப் பற்றி அவர்கள் பேசுவதில்லை. சமுதாயத்திற்காக அவர்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் என்ன? சுவீடனிலுள்ள சமுதாயம் இடம்பெயர்ந்து வந்துள்ள அகதிகளுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? எப்படி அவர்களை கவனிக்க வேண்டும்? என்பதைப் பற்றியெல்லாம் இங்குள்ள மார்க்கத் தலைவர்கள் பேசுவதில்லை. இது மிகவும் சிறந்த சொற்பொழிவாகும். சுவீடனிலுள்ள சமுதாயத்துடன் ஒன்றி விடுவது இடம்பெயர்ந்து அகதிகளாக வந்தவர்களின் பொறுப்பாக இருக்கின்றது. அத்துடன் சுவீடனிலுள்ள சமுதாயம் மற்றும் அரசியல்வாதிகளுக்கு இதில் அவர்கள் தமது சமுதாயத்தினரை எவ்வாறு சிறந்தவர்களாக ஆக்க முடியும்? என்று தூதுச் செய்தி இருக்கின்றது.

★ ஒரு விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: இது மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விஷயமாக இருக்கின்றது. அதாவது, ஓர் ஆன்மீகத் தலைவர் கூறும் விஷயங்கள் உங்களது அறிவிற்கு ஒரு பெரும் விஷயமாகத் தெரிய வருவது மட்டுமல்லாமல் இந்த விஷயங்களின் தாக்கம் உங்களது உள்ளத்திலும் கூட படிகின்றது. இது எனக்கு மிகவும் ஆற்றலை வழங்குவதற்கு காரணமாக இருக்கின்றது. இதன் மூலமாக எனக்கு ஒரு புதிய எழுச்சி கிடைத்திருக்கின்றது. அதாவது, நாம் உலகின் அழிவிற்கு காரணமாக இருக்கின்ற அந்த நிலைமைகளை மாற்ற வேண்டும். ஐரோப்பாவிற்கு அருகிலுள்ள இடங்களில் போரின் காரணமாக இடம்பெயர்ந்து வந்துள்ள அகதிகளுக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சனைகளை நம்மால் தீர்வு காண முடியும். நாம் அனைவரும் ‘எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் இல்லை வெறுப்பு’ என்ற தூதுச் செய்தியைக் கேட்டு அதற்கேற்ப செயல்பட்டால் இந்தப் பிரச்சனைக்கும் நம்மால் தீர்வு காண முடியும்.

★ ஒரு விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. கலீ∴பா எதை கூறினார்களோ அது மிகவும் முக்கியமான தூதுச் செய்தியாகும் என்று நான் கருதுகின்றேன். மேலும் இது அமைதி, அன்பு மற்றும் ஒற்றுமையின் தூதுச் செய்தியாகும். ஒவ்வொருவரும் இந்த தூதுச் செய்திக்கேற்ப செயல்பட வேண்டும். நான் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். மேலும் இது மிகவும் முக்கியமான ஒரு பணியாகும். எனக்கு ஒரு புதிய தைரியம் கிடைத்திருக்கின்றது.

★ ஒரு விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: நீங்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நோக்கத்தையும் அதன் பின்னணியையும் பார்க்கும்போது மேலும் உலகம் முழுவதும் கலீ∴பா அவர்களும் அஹ்மதிகளும் செய்கின்ற தொண்டுகளைப் பார்க்கும்போது இஸ்லாத்தில் உள்ள நல்ல விஷயங்கள் எங்களுக்கு புரிய வருகின்றன.

★ Ake Bader என்றவொரு விருந்தினர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்: கலீ∴பாவின் தூதுச் செய்தி மிகவும் முக்கியமானதாக இருந்தது. சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வது, மற்றவர்கள் தமது கொள்கைகளில் நிலைத்திருப்பதற்கான உரிமையை வழங்குவது ஆகியவற்றின் மூலமாகவே நீதி நிலைநாட்டப்பட முடியும். குறிப்பாக இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பாக இந்த விஷயம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதாவது, அவர்களுக்கு கிடைத்துள்ள இந்த விடுதலைக்கு கண்ணியமளிப்பதும் சமுதாயத்திற்கு பயனளிக்கக் கூடியவர்களாக இருப்பதும் இந்த அகதிகளின் கடமையாக இருக்கின்றது. இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு அவர்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களை அகற்றுவதற்கு உதவி செய்ய வேண்டும். அவர்களிடம் அதிகமாக எதையும் கேட்கக் கூடாது என்ற உணர்வை கலீ∴பா அவர்கள் உள்ளூர் மக்களிடம் ஏற்படுத்தியுள்ளார்கள். கலீ∴பா அமைதியின் அடையாளமாக இருக்கின்றார். நான் இஸ்லாம் தொடர்பாக பலவற்றையும் கற்றுக் கொண்டேன்.

★ ஈராக்கிலிருந்து வந்திருந்த ஒரு கிறித்தவ அகதி ஸலாம் சாஹிப் அவர்களும் இந்த சந்தர்ப்பத்தில் வந்திருந்தார். அவர் தமக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறினார்: கலீ∴பா அவர்கள் கூறிய விஷயங்கள் மிகவும் நல்ல விஷயங்களாகும். அவர்கள் அமைதி மற்றும் நமக்கிடையே ஒற்றுமை ஏற்படுவது பற்றி பேசினார்கள். நான் ஈராக்கில் ஒருபோதும்

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 22 SEPTEMBER 2016 Issue No. 29

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

இத்தகைய விஷயங்களை கேட்டதில்லை. உங்களது கலீ∴பா கூறுகின்ற இஸ்லாத்தின் அந்த வடிவத்தை அங்குள்ள மக்கள் எடுத்துக் கூறவில்லை. ஈராக் கலீ∴பா கூறிய விஷயத்தைக் கேட்டிருந்தால் பிறகு எங்களுக்கு இவ்வாறு இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. மேலும் இங்கு சுவீடனிலுள்ள மக்களுக்கு முன்னால் பிச்சைக்காரர்களாக நிற்க வேண்டியது வந்திருக்காது. இங்கு சுவீடனிலுள்ள மக்களுக்கு நான் என்னுடைய ஏதோவோர் உரிமையை நிலைநாட்ட இங்கு வந்திருப்பது போன்று தெரிகிறது. இந்த உணர்வு எனக்கு மிகவும் தீயதாகும். ஈராக்கில் உங்கள் கலீ∴பாவைப் போன்று ஒரு நபர் கூட இல்லை. கலீ∴பா அவர்கள் தெளிவாகப் பேசுகின்றார்கள். உலகில் என்ன நடக்கின்றது என்பதைப் பற்றி கூறுகின்றார்கள். உங்களது ஜமாஅத் எல்லா முஸ்லிம் பிரிவுகளை விடவும் சிறந்ததாகும்.

★ Joham Winfalt என்ற ஒரு விருந்தினர் தனது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்: எல்லாவற்றையும் விட சிறந்ததாக கலீ∴பா அவர்களின் சொற்பொழிவு இருந்தது. இதற்கு காரணம் என்னவென்றால், கலீ∴பா கூறும் விஷயங்கள் அவரது உள்ளத்திலிருந்து வெளியேறி மற்றவர்களது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அரசியல்வாதிகள் மக்களை மகிழ்விப்பதற்காகப் பேசுகின்றனர். ஆனால், கலீ∴பா பகிரங்கமாகவும் தைரியத்துடனும் பேசுகின்றார்கள். கலீ∴பா அவர்கள் சில முக்கியமான ஞானம் நிறைந்த போதனைகளைச் செய்துள்ளார்கள். எனக்கு இஸ்லாம் தொடர்பாக பலவற்றையும் அறிய முடிந்தது. இடம்பெயர்ந்து வந்தவர்கள் இந்த புதிய இடத்திற்கு வந்து இந்த நாட்டிற்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற விஷயத்தில் நானும் ஒருமித்த கருத்துடையவனாக இருக்கின்றேன். அகதிகளிடம் நாம் எதை எதிர்பார்க்கின்றோம் என்பதைப் பற்றி அரசாங்கமும் அந்த அகதிகளுக்கு வழிகாட்ட வேண்டும். அமைதி இரண்டு தரப்பினரது நேர்மறையான நடவடிக்கைகளைச் சார்ந்தே இருக்கின்றது என்று கலீ∴பா அவர்கள் கூறினார்கள். நாமும் இடம்பெயர்ந்து வந்தவர்களை வரவேற்க வேண்டும். நான் அரசியல் விவகாரங்களில் மிகவும் ஆர்வமுள்ளவன் ஆவேன். நான் உலக நெருக்கடி பற்றிய எண்ணற்ற கட்டுரைகளைப் படித்துள்ளேன். ஆனால், நான் கலீ∴பா அவர்கள் கூறியிருப்பது போன்று சிறந்த தாக்கத்தை ஏற்படுத்திய ஓர் ஆய்வறிக்கையை இதுவரை படிக்கவில்லை. பல மக்களுக்கும் இஸ்லாத்தைப் பற்றிய ஒரு தவறான தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

★ ஒரு விருந்தினரான Evalolgrem அவர்கள் தமக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி கீழ்க்காணும் இந்த சொற்களில் கூறியுள்ளார்: 1970 - ஆம் ஆண்டில் இருந்தே அஹ்மதிகளை எனக்கு தெரியும். அப்போது மேற்கு ஆப்பிரிக்காவில் நான் இருந்த சமயத்தில் நான் அஹ்மதிகளை சந்தித்தேன். நான் உங்களது கலீ∴பாவின் மூலமாக சிறந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். கலீ∴பா அவர்களுக்கு சுவீடன் பற்றி அதிகமான அறிவு இருந்தது. எனக்கு இதற்கு முன்னர் எதுவுமே தெரியாமல் இருந்த பல விஷயங்களைப் பற்றி கலீ∴பா அவர்கள் கூறியுள்ளார்கள். கலீ∴பா அவர்கள் அரசியல் பற்றிய தலைப்புகளில் சொற்பொழிவாற்றினார்கள். பிரச்சனைக்கான தீர்வையும் கூறினார்கள். நான் நீங்கள் கூறுகின்ற விஷயங்களில் நூறு சதவிகிதம் ஒருமித்த கருத்துடையவனாக இருக்கின்றேன். கலீ∴பா அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான வடிவத்தை எடுத்துக் கூறினார்கள். அகதிகளுக்கு ஏற்படுகின்ற நெருக்கடி தொடர்பாக கலீ∴பா அவர்களுக்கு ஆழமான அனுபவம் இருக்கின்றது. இரண்டு பிரிவினர்களும் பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவருக்கு கண்ணியமளிக்க வேண்டும் என்று அவர்கள் கூறிய விஷயம் முற்றிலும் சரியானதாகும். நான் Diversity (பிரிவினை) தொடர்பாக சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளேன். பல மக்களையும் நான் சந்தித்துள்ளேன். உங்களது கலீ∴பா முஸ்லிம்களுக்கு ஓர் ஈடிணையற்ற சிறந்த முன்மாதிரியாகத் திகழ்வதை நான் பார்க்கின்றேன். கலீ∴பா அவர்கள் திருக்குர்ஆனின் மேற்கோள்களிலிருந்தே தனது கருத்துக்களைக் கூறுவது உள்ளத்தை மிகவும் ஈர்க்கக் கூடியதாக இருந்தது. கலீ∴பா அவர்கள் ஐக்கிய நாட்டு சபையின் சட்டங்களைப் பற்றியும் எடுத்துக் கூறினார்கள். எனக்கு பல நெருக்கமான நண்பர்கள் இருக்கின்றனர். அவர்கள் இஸ்லாம் பற்றி மிகவும் அஞ்சுகின்றனர். இப்போது நான் அவர்களிடம் சென்று இஸ்லாத்தின் உண்மை என்ன? என்பதைப் பற்றியும் இஸ்லாம் தொடர்பாக அஞ்ச வேண்டிய தேவையில்லை என்பதைப் பற்றியும் கூறுவேன். எனக்கு இந்த சொற்பொழிவின் Youtube Link -ஐ அனுப்புங்கள். நான் எனது எல்லா நண்பர்களுக்கும் அதை அனுப்பி வைப்பேன். *(தொடரும்)*

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

வேண்டும் என்பதேயாகும். இதுவே இவ்வுலகில் அவர்களுக்கு கிடைக்கும் இழிவாகும். மறுமையிலும் அவர்களுக்கு பெரும் ஆக்கினை உள்ளது. *(5:34)*

எனவே, இறைவனது பார்வையில் நமது ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை மறுப்பதும் அவர்களை எதிர்த்து நிற்பதும் பெரிய விஷயமாக இல்லாமல் இருந்தால் பிறகு ஏகத்துவவாதிகளாக இருந்த அத்தகைய மறுப்பவர்களை (உதாரணமாக யூதர்களை) அவர்களது மறுப்பு மற்றும் எதிர்ப்பின் காரணமாக இவ்வளவு கடுமையான தண்டனையை அதாவது பல்வேறு வகையான தண்டனைகள் மூலமாக அவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்ற கட்டளை இறைவனது வேதத்தில் ஏன் எழுதப்பட்டுள்ளது ? மேலும் ஏன் இவ்வளவு கடுமையான தண்டனை தரப்பட்டிருக்கின்றது? இரண்டு பிரிவினர்களும் ஏகத்துவவாதிகளாக இருந்தனர். இந்த தரப்பில் இருந்தவர்களும் அந்த தரப்பில் இருந்தவர்களும் ஏகத்துவவாதிகளாக இருந்தனர். எந்தப் பிரிவிலும் எவருமே இறைவனுக்கு இணை வைப்பவர்களாக இருக்கவில்லை.

இவ்வாறிருந்தும் யூதர்கள் மீது சிறிதளவு கூட கருணை காட்டப்படவில்லை. ஏகத்துவத்தைப் பின்பற்றும் அம்மக்கள் தூதரை மறுத்ததன் காரணமாகவும் தூதரை எதிர்த்து நின்றதன் காரணமாகவும் மிகவும் மோசமாக கொலை செய்யப்பட்டனர். எதுவரையென்றால், ஒருமுறை பத்தாயிரம் யூதர்கள் ஒரே நாளில் கொலை செய்யப்பட்டனர்.[1] ஆனால், அவர்கள் தமது மார்க்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே மறுக்கவும் எதிர்க்கவும் செய்தனர். தங்களது எண்ணத்தில் அவர்கள் உறுதியான ஏகத்துவவாதிகளாக இருந்தனர். இறைவன் ஒருவன் என்பதை அறிந்திருந்தனர்.

எனினும், இந்த விஷயத்தை கண்டிப்பாக நினைவில் கொள்ளுங்கள். சந்தேகமின்றி ஆயிரக்கணக்கான யூதர்கள் கொலை செய்யப்பட்டனர். ஆனால், அவர்கள் முஸ்லிம்களாக ஆக வேண்டும் என்ற நோக்கத்தில் கொலை செய்யப்படவில்லை. மாறாக, அவர்கள் இறைவனின் தூதரை எதிர்த்து நின்றனர் என்பதற்காக மட்டுமே கொலை செய்யப்பட்டனர். ஏனென்றால், அவர்கள் இறைவனின் பார்வையில் தண்டனைக்கு உரியவர்களாக ஆகி விட்டனர். தண்ணீரைப் போன்று அவர்களது இரத்தம் பூமியில் ஓடியது. எனவே, ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்வது போதுமானதாக இருந்திருந்தால் யூதர்கள் மீது எந்தக் குற்றமும் இருக்கவில்லை. அவர்களும் ஏகத்துவ -வாதிகளாகவே இருந்தனர். தூதுரை மறுத்து அவரை எதிர்த்ததன் காரணமாக மட்டும் ஏன் இறைவனது பார்வையில் அவர்கள் தண்டனைக்கு உரியவர்களாக ஆகி விட்டனர்.

---

☆ சில என்ற சொல் இவ்வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதற்கு காரணம் எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகளில் அவை அனைத்தும் நிறைவேறி விட வேண்டும் என்பது கண்டிப்பானதல்ல. மாறாக, சிலரது முடிவு மன்னிப்பதன் மூலமாகவும் நடைபெறலாம்.

[1] ஒரே நாளில் கொலை செய்யப்பட்ட யூதர்களின் கோத்திரமான பனூ குரைலாவைச் சார்ந்த இளைஞர்கள் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கின்றது. வரலாற்றில் கொலை செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை பல்வேறு விதமாக எழுதப்பட்டிருக்கின்றது. அதனை சிலர் **400** என்றும் சிலர் **700** என்றும் சிலர் **800** என்றும் சிலர் **900** என்றும் எழுதியுள்ளனர். இதை விட அதிகமாகவும் சில அறிவிப்புகளில் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கலாம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த இடத்தில் பத்து நூறு என்ற எண்களில் எழுதியுள்ளார்கள். அதனை எழுதுபவர் பத்தாயிரம் என்று புரிந்து கொண்டார். இந்தப் பக்கத்தின் இறுதி வரியில் ஆயிரக்கணக்கில் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது அதிக எண்ணிக்கையில் பல்வேறு போர்களிலும் பல்வேறு சமயங்களிலும் கொலை செய்யப்பட்ட யூதர்கள் ஆவர். واللہ اعلم بالصواب உண்மை நிலையை அல்லாஹ்வே நன்கறிவான்.

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 159-162)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad